# LAW & GOSPEL
# நியாயப் பிரமாணம் - சுவிஷேசம்

தேவனுடைய வார்த்தையை சரியாக பயன்படுத்திக் கொள்வதென்பது லூத்தாரனியர்களாகிய நம்முடைய கடமையாயிருக்கிறது.

நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.
2 தீமோ 2:15 வேதாகமத்தில் இருக்கிற இரண்டு பெரிய உபதேசங்களை அநுசரிப்பதின் மூலம் தேவனுடைய வார்த்தையை எப்பொழுதும், எப்படி, எதற்காக தேவனுடைய சட்டத்தை அல்லது சுவிஷேசத்தை பயன்படுத்திக் கொள்ளக் கூடும்.

## Definition & Differentiation - அர்த்தம் மற்றும் வேறுபாடு:

ஐசச் வாட்ஸ் ஒரு பாடலில் இந்த இரண்டு உபதேசங்களின் வேறுபாட்டை தெளிவுப் படுத்துகிறார். நியாயப் பிரமாணம் நாம் கடவுளுக்காக என்ன கிரியை செய்ய வேண்டும் என்பதை கட்டளையிடுகிறது.

ஆனால் சுவிசேஷம் அவருடைய சித்தத்தை நடப்பிப்பதற்கு நமக்கு எங்கிருந்து பெலன் வருகிறது என்பதை காட்டுகிறது.

நியாயப் பிரமானம் நம்முடைய பாவத்தை காட்டி, நம்முடைய இருதயம் எவ்வளவு வெட்கக் கேட்டுக்குள் இருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

ஆனால் சுவிஷேசம் மன்னிப்பு, அன்பு மற்றும் கிருபை இவைகளின் மூலம் சுத்தமாக்குவதை காட்டுகிறது.

ஒரு முறை தவறி விட்டாலும் எப்படிப்பட்ட சாபம் வரும் என்பதை நியாயப் பிரமானம் காட்டுகிறது.

ஆனால் சுவிஷேசம் அநேக வருஷங்களாக செய்து வந்த பாவத்தை, குற்றத்தை, தப்பை மன்னிக்கிற கிறிஸ்துவை காண்பிக்கிறது.

மனிதர்களின் மேல் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாக இருக்கிற சாபங்கள் எல்லாம் ஒரேயடியாக ஓடிப்போகும்.

என்னுடைய ஆத்துமா அதனுடைய ஜீவனை, சுகத்தை நியாயப்பிரமாணத்திலிருந்து பெற்றுக் கொள்ளாது. சுவிஷேசம் கொடுக்கிற நம்பிக்கைக்கு வளர்ந்து, மனிதன் வாக்கு தத்தங்களை நம்பி ஜீவிக்கிறது.

இந்த பாடல் சுவிஷேசத்திலிருக்கிற இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றின நல்ல விஷயங்களை ஞாபகப் படுத்துகிறது. நமக்காக ஜீவித்து, மரித்து நாம் எப்போதும் ஜீவிக்க முடியாத பரிசுத்த ஜீவியத்தை ஜீவித்து, நம்முடைய தண்டனையை பெறுவதற்கு தியாக தாரமான, ஜீவாதார மரணத்தை அடைந்து, நாம் அவரிடத்தில் வைக்கும் விசுவாசத்தின் மூலம் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளும்படிச் செய்தார்.

மற்றும் ஒரு விதத்தில் நியாயப் பிரமாணம் நம்மை பாவிகளாக கண்டித்து, தேவனுடைய சித்தத்தைக் காட்டுகிறது. அவற்றை நாம் நம்முடைய ஜீவியத்தில் பூரணமாக நிறைவேற்ற முடியாது. நம்முடைய கடவுள் பரிசுத்தர், நீதிபரரான கடவுள். பழைய ஏற்பாட்டில் சொல்லி புதிய ஏற்பாட்டில் கூட மறுபடியும் சொல்லுகிறார். ஆகையால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள். மத் 5:48.

லேவி 19:2 பார்க்கவும். யோவான் ஞானஸ் நானகன் சொல்லுகிற படி நம்முடைய இயேசு கிறிஸ்து உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவாட்டுக் குட்டி.

துரதர்ஷ்டவசமாக இந்த காலத்தில் அநேகரை நீங்கள் எப்படி இரட்சிக்கப்பட்டீர்கள் என்று கேட்டால் ஒரே சமயத்தில் அவர்கள் எல்லோரும் பத்துக்கட்டளைகளுக்கு கீழ்படிந்ததினால், அவற்றை அனுசரித்ததினால் இரட்சிக்கப்பட்டவர்களாயிருக்கிறோம் என்பதை ஏற்றுக் கொள்பவர்கள் நிறையபேர் இருக்கலாம். இப்படிப்பட்ட காரியம் நியாயப் பிரமானத்தையாகிலும், அவற்றை செய்து, இயேசு கிறிஸ்துவை மனிதர்களுக்கு மாதிரியாக ஒரு நல்ல மனுஷனாக அவரைக் குறைத்து மதிப்பிடுகிறது.

## Purpose - உத்தேசம் :

கடவுளுடைய வார்த்தை சரியாக, தெளிவாக பரிசிலனை செய்தால் நியாயப்பிரமாணம், சுவிஷேசம் இவ்விரண்டினுடைய உத்தேசம் தெளிவுப்படுத்தப்படுகிறது. சுவிஷேசம் இரட்சிக்கப்பட்டவர்க்கு தேவனுடைய சித்தம் இருக்கிறது. ரோமர் 1:16, யோவான் 3:1 நிறைய வார்த்தைகள் சொல்லுகிறபடி, இரட்சிப்பு கல்வாரிமலை மீது காணப்படுகிறது. ஆனால் சீனாய் மலை மீது அல்ல.

கீழ்கண்ட பாகம் சொல்லுகிறபடி இரட்சிப்பு என்பது நியாயப்பிரமாணத்தினுடைய கிரியைகளினால் வருவது அல்ல (பாவம் செய்கிற ஆத்துமா சாகவே சாகும்) எசேக் 18:4, எப்படியெனில் ஒருவன் நியாயப் பிரமாணம் முழுவதையும் கை கொண்டிருந்தும் ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான். யாக் 2:10.

நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டு இருக்கிறார்கள். நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளை எல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே. கலாத் 3:10, நியாயப்பிரமாணத்தினுடைய மிக முக்கிய உத்தேசம் என்னவென்றால் நாம் மீறிய கட்டளையை நம்முடைய பாவத்தை நமக்கு காட்டுவது. இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தில் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை. ரோமர் 3:20, இதனுடைய முக்கிய நோக்கம் அர்த்தம் என்னவென்றால் மனிதர்கள் எல்லோருக்கும் இரட்சகருடைய அவசியத்தை, மிக முக்கிய அவசரத்தை காட்டுகிறது. இரட்சகர் தேவையென்பதை தெளிவுப்படுத்துகிறது.

நியாயப்பிரமாணம் ஒரு ஆசானாக, மார்க்க தரிசியாக வேலை செய்கிறது. இல்லையென்றால் கிறிஸ்தவர்கள் எல்லோரும் அவர்கள் ஜீவியத்தின் மேல் கடவுளுடைய சித்தம் என்னவாயிருக்கிறதோ, என்பதை கடவுளுடைய வார்த்தையில் இருந்து தெளிவாக காட்டி அது ஒரு விதியாக இருக்கிறது. சங் 119:105, 32 அது ஒரு சங்கிலியைப் போன்று வேலை செய்கிறது. பாவத்தில் இருக்கிற உலகத்தை அதனுடைய பயத்தோடு பலவந்தப்படுத்துகிறது. சங் 119:120, 1 தீமோ 1:9-10

## Power - வல்லமை :

ரோமர் 1:16ல் இப்பொழுது வரை நாம் பார்த்த மீதியிருக்கிற பாகங்களில் சுவிஷேசத்தில் இருக்கிற வல்லமை நியாயப்பிரமாணத்துடன் சம்மந்தமுடையது அல்ல. பாஸடர் குர்த் இவற்றை விவரிப்பதற்கு ஒரு உதாரணத்தை சொல்லுகிறார். ஒரு தந்தை தன்னுடைய மகனிடத்தில் இரம்பத்தினால் இந்த கட்டையை அறு, நீ அறுக்காமல் போனால் இரவு நான் வந்து உன்னை தண்டிப்பேன், என்றுச் சொன்னார். மகன் முயற்சி செய்தான். ஆனால் அவன் மிகவும் பெலவீனமானவன். பெலவீனமான சரீரத்தை உடையவன். பெரிய அண்ணனுடன் கலந்து வந்து, ஒரு அடி பக்கத்தில் நின்று நான் உனக்காக இதைச் செய்வேன் என்று சொல்லி அந்த வேலையை பெரியண்ணன் செய்தான். இப்பொழுது அவர்கள் தகப்பன் வந்து அவனை தண்டிப்பாரா ? தண்டிக்கமாட்டார். கட்டளை நிறைவேற்றப்பட்டது. வேறொருவரின் மூலம் பெற்றுக் கொள்கிறோம். அப்படியே நம்முடைய பரலோக தந்தை நம்முடன் சொல்கிறார். நீ செய் அல்லது செய்யாமல் போ, நாம் முயற்சி செய்வோம்,. ஆனால் நாம் பெலவீனமானவர்கள் - பெலவீனமான பாண்டமாயிருக்கிறோம். நம்முடைய பெரிய அண்ணனாகிய இயேசுவுடன் கலந்து வந்து அவன் பக்கத்தில் நின்று உனக்காக நான் செய்வேன் என்று சொல்வார். அவர் அதைச் செய்வார். இப்பொழுது நீண்ட காலம் முடிந்து விட்டப் பிறகு கடவுள் தண்டிப்பாரா ? தண்டிக்கமாட்டார். கட்டளை நிறைவேற்றப்படும். ஆம் மற்றொருவரின் மூலம் ஆகவே நமக்குப் பதிலாக நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றிய கிறிஸ்துவின் மூலம் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். அவருடைய நீதி வெண்மையான வஸ்திரம் போல நம் மீது இருக்கிறது.

**Motive - உத்தேசம்:**

கிறிஸ்துவ ஜீவியத்தின் உத்தேசம் சுவிஷேசத்திலும், சுவிஷேசத்தின் மூலமும் சம்மந்த முடையதாயிருக்கிறது.

கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது. ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க எல்லோரும் மரித்தார்கள் என்றும்,

பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்திருக்கிறவருக் கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லோருக்காகவும் மரித்தாரேன்றும் நிதானிக்கிறோம். 2 கார் 5:14-15

நாம் பரிசுப் பொருளை அதாவது வெகுமதியை பெற்றுக் கொள்வதற்கு நற்கிரியை செய்ய வேண்டி அவசியமில்லை. ஆனால் கிறிஸ்து நமக்காக மரித்து நாம் கூட அவரிருக்கிற இடத்தில் இருக்கும் படி நமக்கு ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் செய்வதற்கு நமக்கு முன்பாகவே சென்றிருக்கிறார். ஆகவே நாம் நன்மையை பார்க்க வேண்டும். நாம் தண்டனையைக் குறித்து பயப்பட வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் கிறிஸ்து நமக்காக, தண்டிக்கப்பட்டார். நம் ஆக்கினை அவர் மேல் விழுந்தது. அன்பிலே பயமில்லை. பூரண அன்பு பயத்தை புறம் மே தள்ளும், பயமானது வேதனையுள்ளது. பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல 1 யோவான் 4:18.

**Results - முடிவுகள் :**

லூக் 2:10-20 வரை நாம் பார்த்தால் சுவிஷேசத்தை கேட்கும் போதே சந்தோஷம் வரும் லூக் 18 : 13, நியாப் பிரமானத்தின் மூலம் வருகின்ற முடிவு பாவம் அதன் மூலம் வருகின்ற துயரத்தை, துக்கத்தை பார்க்கலாம். நியாயப்பிரமாணம், சுவிஷேசம் இவ்விரண்டையும் குறித்து நாம் பேச வேண்டும், போதிக்க வேண்டும்.

தேவனுக்கேற்ற துக்கம் பின் மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக் கேதுவான மனந்திரும்பதிலை உண்டாக்குகிறது. லௌகீக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது. 2 கோர் 7:10.

லூத்தரன் அறிக்கை உபதேசத்திற்கு சொந்தமான எழுத்துக்களுக்கு அவைகளுக்கு சம்மந்தமுடைய ஒப்பந்தம். நாங்கள் உபதேசத்தை நமபி இயேசு கிறிஸ்துவல் விசுவாம் வைக்கிறவர்கள், கடவுள் யாரை மெய்யாக மாற்றுகிறாரோ அவர்களை கிறிஸ்துவின் முலம் நியாயப்பிரமாணத்தோடு சம்மந்தமுடைய சாபத்திலிருந்து விடுவித்து, எதிரிடையாக இருக்கிறவர்களை தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் நன்றாக புடமிட்டு நியாயப்பிரமாணத்தை அனுசரித்து, அவர்கள் திரும்பவும் மறுபடியும் பிறந்தவாகளாய், அவர்கள் ஆவியின் மூலம் மனதில் புதிதாக்கப்பட்டவர்களாய், மறுபடியும் பிறந்த மனுஷர்கள் புதிதாக்கப்பட்டு, மறு ரூபமாக்கப்பட்டு புதிதாக்கப்பட்ட உலகத்தில் ஆனந்தமாக இருக்கிறார்கள். மெய்யாகவே அது கடவுளுடைய நியாயப்பிரமாணத்திலிருந்து ஸ்திரமாக அவர்களுடைய வழியை வெளிச்சமாக்கின பிறகே அது தொடங்கும். விசுவாசம், கீழ்படிதல் இல்லாமல், ஆத்துமாவில் விருப்பம் உடையவர்களாய் இப்பொழுது வரைக்கும் அவர் மறுபடியும் பிறந்தவராய், நியாயப்பிரமாணத்துக்குரிய எந்த பயமும், எவ்விதமான இரட்சிப்பும் அவனுக்கு இல்லை.

நாம் நம்முடைய வாழ்க்கை முழுவதும் நாம் கடவுளுடைய வார்த்தையை தினந்தோறும் நன்றாக அனுசரிக்க வேண்டும். நாம் ஒழுங்குப்படி அப்படி செய்வது ஒரு கனவாக அதனுடைய பரிபூரணமல்ல. கடவுளுடைய ஆவி நம்முடைய ஆவியுடன் கலந்து, இணைந்து கிரியைச் செய்கிறது. ஆகவே கடவுளுக்கு ஸ்தோத்திரம். சத்திய ஆவி நம்மை சத்தியத்திற்குள் வழி நடத்தும். இயேசு கிறிஸ்து சொன்ன எல்லாவற்றையும் ஞாபகப்படுத்தும். எல்லாவற்றையும் நமக்கு போதிக்கும். இன்னும் அதிகம் செய்வீர்கள் என்று இயேசு சொல்லியிருக்கிறார். அவர் மூலம் நாம் பேசமுடியும், உபதேசிக்க முடியும். கடவுள் வார்த்தையை நமக்கு கொடுத்து அவற்றை நாம் சரியாக பயன்படுத்திக் கொள்வதற்கு உதவி செய்கிறார். எல்லா புகழும், துதியும் மகிமையும் தேவனுக்கே உடையதாகட்டும். ஆமென்.